1. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு.( 72)

   *அன்பிலாதவர் எல்லாப் பொருட்களையும் தமக்கே உடைமையாக்கிக் கொண்டு வாழ்வார். ஆனால் அன்புடையவரோ தம் உடலைக்கூடப் பிறருக்கு உரித்தாக்கி வாழ்வார்.*

2. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
   பருவந்து பாழ்படுதல் இன்று (83)

   *தம்மை நோக்கி நாள்தோறும் வரும் விருந்தினரை வரவேற்றுப் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, வறுமைத் துன்பத்தால கெட்டுப்போவதில்லை.*

3. இனிய உளவாக இன்னாத கூறல்
   கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (100)

   *இனிய சொற்கள் இருக்க இனிமையற்ற கடுஞ்சொற்களைத் தேடிப்பிடித்து கூறுவது, சுவைக்க இனிய கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் உண்ணுவதைப் போன்றதாம்.*

4. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
   நன்மை கடலின் பெரிது.(103)

   *பயனை எதிர்பார்க்காது செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், அதனால் விளையும் நன்மை கடலைவிடவும் பெரியதாம்.*

5. ஒழுக்கத்தின் எய்துவர மேன்மை இழுக்கத்தின்
   எய்துவர் எய்தாப் பழி. (137)

   ஒழுக்கத்தைக் காத்து வந்தால் எல்லாருமே மேன்மையைத்தான் அடைவர். ஆனால், ஒழுக்கம் தவறி நடந்தால் வேண்டாத பழிகளையெல்லாம் அடைந்து துன்புறத்தான் செய்வர்.

6. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது. (102)

*உதவி தேவைப்படும் காலம் அறிந்து செய்த உதவி சிறியதாக இருந்தாலும். அந்த உதவிக்கு நிகர் எதுவுமேயில்லை. உலகத்தைவிடவும் மிகவும் பெரியதாகும்.*

7. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
   தழுக்காறு இலாத இயல்பு. (161)

   *தன் நெஞ்சத்தில் பொறாமைக் குணங்களைக் கொள்ளாமல் வாழுகின்ற தன்மையைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு ஒழுக வேண்டும்.*

8. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
   நன்னயம் செய்து விடல்.(314)

   *தமக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தலாவது, அந்தத் துன்பம் செய்தவரே நாணிப் போகும்படியாக, அவருக்கு நன்மை செய்து விடுவதாகும்.*

9. எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்என்ப வாழும் உயிர்க்கு. (392)

   *எண் என்று கூறப்படுவதும் எழுத்து என்று கூறப்படுவதும் ஆகிய இரண்டையும் இந்த உலக மக்களின் கண்கள் என்று சான்றோர் கூறுவர்.*

10. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
    குன்ற வருப விடல். (961)

    *மிகவும் முக்கியமான சிறப்புக்களை உடைய செயல்களே ஆனாலும், குடிப்பெருமைக்குக் குறைவுதரும் செயல்களை ஒருவன் செய்தல் கூடாது.*